1987 மார்ச் 25]

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் கூட பெண்ணாகரம் தாலுக்கா 8 வருடங்களாக தாலுக்காவாக இருக்கிறது. அங்கே அரசு மருத்துவமனை இருக்கிறது. ஆனால் படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக இல்லை. அங்கே புற நோயாளிகள் தான் வந்து செல்லுகிறார்கள். பெண்ணாகரம் ஒன்றியம் ஒரு மலைப்பகுதி ஒன்றியமாக இருப்பதால் அந்த பெண்ணாகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையை, படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக ஆக்கித்தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரோடு நானும் அனுதாபப்படுகிறேன். ஆனால் மாண்புமிகு நாவலர் அவர்கள் இணக்கம் தெரிவிப்பார்களானால் அதற்கு ஆட்சேபணை இருக்காது. ஆனால் தற்சமயம் நிதியாதாரத்தைப் பொறுத்து இந்த ஆண்டு எங்கே துவக்கலாம் என்பது பற்றி அரசு முடிவு எடுக்கும்.

சாத்தான்குளத்திலிருந்து கோயம்புத்தூருக்கு திருவள்ளுவர் பேருந்து.

166—(*வினா எண். 3443)—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளத்திலிருந்து திருச்செந்தூர் வழியாக கோயம்புத்தூருக்கு திருவள்ளுவர் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய செயற்குறிப்பேதும் இல்லை.

திரு. எஸ். என். இராமசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற் குறிப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் சாத்தான்குளம், திசையன்விளை, உவரி,

உடன்குடி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பழனி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளில் வர்த்தகம் செய்து வருகிறார்கள். அவர்கள் போய் வருவதற்கு மிகவும் சிரமமாக இருப்பதால் இந்த திருச்செந்தூர்-கோவை பேருந்து வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அவர்களுடைய நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக இந்த சூப்பர் டீலக்ஸ் பஸ் ஒன்றை விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே, உடன்குடியிலிருந்து கோவைக்கு ஒரு பேருந்து இயக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆனால் உடன்குடிக்கு நீங்கள் கேட்கின்ற சாத்தான்குளத்திலிருந்து ஏறத்தாழ ஒரு நாளைக்கு 34 முறை—அது 14 கிலோ மீட்டர் தூரம் உள்ளது—7 பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. எனவே, அந்த பேருந்துகளில் வந்து கோவை பேருந்திலே போவது சிரமமாக இருக்காது. எனவே, இது நல்ல வசதியோடு இருக்கிறது என்று தான் கருதுகிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுவதைப்போல் அது நல்லதாக இருந்தாலும் அங்கு இரயில் வசதி இல்லாத காரணத்தினால், அங்கிருந்து சென்னைக்கு, கோவைக்கு வரவேண்டுமென்றால் நெல்லைக்கும் தூத்துக்குடிக்கும் வந்து தான் இரயில் ஏற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதன் காரணமாக இந்த பஸ் கட்டாயம் விட வேண்டுமென்று ஏற்கனவே இரண்டு ஆண்டுகளாகக் கேட்டு வருகிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதை மறு பரிசீலனை செய்து இந்த பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது ஏற்கனவே சொன்னபடி அந்த கோவைக்கு செல்லுகின்ற பேருந்துக்கு வருவதற்கு வசதியாக இருக்கிறது. எதாவது ஒரு சென்ட்டரிலிருந்து தான் வண்டியை ஆரம்பிக்க முடியும். காரணம் இது எக்ஸ்பிரஸ் பஸ்ஸாக இருப்பதால் எல்லா ஊர்களி

லிருந்தும் ஆரம்பிப்பது என்பது முடியாத நிலையாக இருக்கிறது. அப்படி எல்லா ஊர்களிலிருந்தும் ஆரம்பிப்போமானால் இந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் என்பது தனித் தன்மையை இழந்துவிடும் என்று கருதுகிறேன். இருந்தாலும் இவ்வளவு தூரம் நீங்கள் சொல்லுகின்ற காரணத்தினால் அதை பரிசீலித்து பின்னாலே சொல்லுகிறேன்.

திரு. ச. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, எடப்பாடியி லிருந்து சென்னைக்கு அரசு பேருந்து விட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கும் எடப்பாடிக்கும் ரொம்ப தூரம். ஆனால் இப்போது கேட்டிருக்கின்ற அந்த கோரிக்கை ஏற்கனவே பரிசீல னையில் இருப்பதாகக் கருதுகிறேன். எனக்கு நினைவு இல்லை. தனியாக கேள்வி போட்டால் விளக்கமாகத் தருகிறேன்.

திரு. ஆ. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, சென்னையிலி ருந்து மதுரைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தி லிருந்து திண்டுக்கல் வழியாக பேருந்து விடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது கொஞ்சம் திருநெல்வேலிக்கு பக்கமாக போய் இருக்கிறது. தனியாக அது பற்றி விவாதித்தால் சரியாக இருக்குமே ஒழிய, இந்தக் கேள்வியோடு இணைத்து கேட்கின்றபோது சரியான விளக்கம் இப்போது இருக்காது.

ஹெல்மெட் அணியும் முறை செயற்படுத்தப்பட்டபின் ஏற்பட்ட விபத்துக்கள்.

167—(* வினா எண். 8511)—திரு. மா. மணிமாறன் : மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஹெல்மெட் (Helmet) அணியும்முறை செயல்படுத் தப்பட்டபின் விபத்துக்குள்ளானவர்கள் எவரேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?